# March 9, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஈரான் தலைநகர் டெஹ்ரான் மற்றும் சுற்றுவட்டாரத்தில் ஐந்து மிகப்பெரிய கச்சா எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி கடும் தாக்குதல் நடத்தியது.

(i) இதனால், அந்தப் பகுதியே தீப்பிழம் பாகவும், புகை மூட்டமாகவும் காட்சிய ளித்தது. கச்சா எண்ணெய் சேமிப்புக் கிடங்குகளை ராணுவத்துக்காக ஈரான் பயன்படுத்துவதால் அவற்றைக் குறிவைத்ததாக இஸ்ரேல் கூறியுள்ளது.

(ii) இந்தத் தாக்குதலால் டெஹ்ரான் நகரமே பற்றியெரிவது போன்ற சூழல் ஏற்பட்டுள்ளது. நகர் முழுவதும் பெரும் கரும்புகை சூழ்ந்துவிட்டது. மிகவும் மோசமான அமில மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(iii) இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பது உடனடியாகத் தெரியவில்லை. தாக்குதல் தொடரும் என்று தெரிவதால் டெஹ்ரான் மற்றும் சுற்றுவட்டார மக்கள் வெளியே வர வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2. பரபரப்பான அரசியல் சூழலில், நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு திங்கள்கிழமை (மார்ச் 9) தொடங்குகிறது. மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை பதவி நீக்கக்கோரும்எதிர்க் கட்சிகளின் தீர்மானம், விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்காக முதல் நாளில் தாக்கலாக உள்ளது.

(i) ஏப். 2 வரை நடைபெறும் இந்த அமர்வில் மேற்காசிய போர் நிலவரம், ஈரான் மீதான மத்திய அரசின் நிலைப்பாடு, அமெரிக்க அனுமதியின்பேரில் ரஷிய எண்ணெய் கொள்முதல் உள்ளிட்ட விவகாரங்களை எதிர்க்கட்சிகள் எழுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஜன. 28- ஆம் தேதி குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கியது. கடந்த பிப்.13-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முதல்கட்ட அமர்வில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன.

(iii) குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது ராகுல் காந்தி பேச அனுமதிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு, முன்னாள் ராணுவ தலைமைத் தளபதி எம்.எம். நரவணேயின் வெளியிடப்படாத சுயசரிதை நூல் சர்ச்சை, இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் ஆவணங்கள் போன்ற விவகாரங்களை எழுப்பி, மத்திய அரசுடன் எதிர்க்கட்சிகள் மோதல்போக்கை கடைப்பிடித்தன.

(iv) கடந்த காலங்களில் மக்களவைத் தலைவர்களாக இருந்த ஜி.வி.மாவலங்கர் (1954), ஹுக்கம் சிங் (1966), பல்ராம் ஜாக்கர் (1987) ஆகியோர் இதுபோல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டனர். ஆனால், எந்தத் தீர்மானமும் வெற்றி பெறவில்லை. தற்போது எம்.பி.க்கள் பலத்தின் அடிப்படையில், ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானமும் தோல்வியையே சந்திக்கும்.

3. ஆடவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்தை 96 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி கோப்பையை தக்க வைத்துக்கொண்டது நடப்பு சாம்பியன் இந்தியா.

(i) இதன்மூலம் டி20 உலகக் கோப்பை வரலாற்றில் தொடர்ந்து 2-ஆவது முறையாக சாம்பியன், போட்டியை நடத்திய நாடு பட்டம் வென்றது, மூன்றாவது முறையாக உலக சாம்பியன் பட்டம் வென்றது என முப்பெரும் சாதனைகளை இந்தியா படைத்தது.

4. உலகக் கோப்பை டி20 கிரிக்கெட் போட்டி சாம்பியனுக்கு வழங்கப்படும் கோப்பை, ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரைச் சேர்ந்த அமித் பபுவால் வடிவமைத்துள்ளார். கடந்த 2007-இல் முதன்முறையாக டி20 உலகக் கோப்பை நடைபெற்ற போது, ஐசிசி தனக்கு கோப்பையை

வடிவமைக்கும் பணியை வழங்கியதாக பபுவால் தெரிவித்துள்ளார்.

5. உள்நாட்டில் பெட்ரோல், டீசல் விநியோகத்தை உறுதிசெய்யும்விதமாக அமெரிக்கா, ரஷியா, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய்யை கூடுதலாக கொள்முதல் செய்ய இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

(i) இந்தியா கச்சா எண்ணெய் தேவையில் 88 சதவீதத்தை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்கிறது. அரபிக் கடல் மற்றும் பாரசீக வளைகுடாவை இணைக்கும் ஹோர்முஸ் நீரிணை வழியாக மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இந்தியா கடந்த ஆண்டில் கொள்முதல் செய்த கச்சா எண்ணெய் 41 சதவீதமாக இருந் தது.

(ii) ரஷிய கச்சா எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் மீது அமெரிக்கா கடந்த ஆண்டு அக்டோபரில் விதித்த பொருளாதார தடைகளைத் தொடர்ந்து, ரஷியாவிடமிருந்து கொள்முதலை இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் குறைத்துக் கொண்டன. இதையடுத்து, மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் அதிகரித்தது.

(iii) ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்கள் மற்றும் அதற்குப் பதிலடியாக சவூதி அரேபியா, கத்தார், ஓமன் உள்ளிட்ட அண்டை நாடுகளில் உள்ள அமெரிக்க விமானப் படை தளங்கள் மற்றும் இஸ்ரேல் மீது ஈரான் நடத்திவரும் தாக்குதல்களால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மோதல் போக்கு உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

(iv) இதனால், அப்பகுதியில் உள்ள ஹோர்முஸ் நீரிணை வழியாகநடை பெற்றுவந்த கச்சா எண்ணெய் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அமெரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, தென் அமெரிக்க நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய்யை இந்திய நிறுவனங்கள் கொள்முதல் செய்வதாக மத்திய பெட்ரோலிய அமைச்சக வட்டாரம் தெரிவித்தது.

6. உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு பெண் வழக்குரைஞர்களை பரிந்துரைப்பது குறித்து உயர்நீதிமன்ற கொலீஜியங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் தெரிவித்தார். இது குறித்து புது தில்லியில் நடைபெற்ற இந்திய சட்டத் துறை பெண்களின் முதல் தேசிய மாநாட்டில் அவர் பேசியதாவது:

(i) பெண் வழக்குரைஞர்கள் சலுகைகளை எதிர்பார்க்கவில்லை என்ற உண்மையை வழக்குரைஞர்கள் சங்கத்தில் இருப்பவர்கள் ஏற்க வேண்டும். தங்களுக்குரிய பிரதிநிதித்துவம் நியாயமான முறையில் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர். ஆனால், நீண்ட காலமாக அது நிறைவேறாமல் உள்ளது.

(ii) ஒரு மாநிலத்தைச் சேர்ந்த பெண் வழக்குரைஞர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குரைஞர்களாகப் பணியாற்றி வந்தால், அவர்களை உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு பரிந்துரைப்பது குறித்து அந்த வழக்குரைஞர்களின் மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்ற கொலீஜியங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

7. சிறப்புப் பொருளாதார மண்டல கொள்கையில் (எஸ்இஇசட்) பெரிய சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்க 17 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இதுகுறித்து மத்திய அரசு அதி காரி ஒருவர் கூறியதாவது:

(i) சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் அடுத்தகட்ட கொள்கையை வடிவமைக்கும் நோக்கில், விரிவான சீர்திருத்தங்களுக்கான திட்டத்தைப் பரிந்துரைத்து 17 பேர் கொண்ட குழு அறிக்கை சமர்ப்பிக்கும்.

(ii) பல்வேறு ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்கள், வரியில்லா இறக்குமதி அனுமதி, மூலதன சரக்குகள் ஏற்றுமதி ஊக்குவிப்பு உள்ளிட்டவை இடையே உள்ள ஒத்திசைவு குறித்து அந்தக் குழு ஆய்வு மேற்கொள்ளும்.

(iii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல், உற்பத்தி, சேவைகள், மதிப்பு கூட்டல்,

வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் செயல்திறன் குறித்தும் இந்தக் குழு மதிப்பிடும்.

(iv) வர்த்தகம், சுங்கம், நீதி ஆயோக், இந்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர் என்றார்.